விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 29 புதன்கிழமை (15.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361

## வடக்கின் அபிவிருத்தி தொடர்பில்
# ஆளுநர் தலைமையில் யாழில் கலந்துரையாடல்

### ஆங்கிலத்தில் கூட்டம் நடைபெற்றதால் சிறீதரன் எம்.பி வெளிநடப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஆளுநர் தலைமையில் யாழில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஆங்கில மொழியில் கூட்டம் நடைபெற்றமையால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கூட்டத்திலிருந்து சிறீதரன் எம்.பி வெளியேறினார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மந்திகை வைத்தியசாலையில்
# காஸ் அடுப்பு வெடிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சமையல் அறை காஸ் அடுப்பு நேற்று வெடித்து சிதறியுள்ளது.

காஸ் அடுப்பு வெடித்ததால் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-18,33,60,104)

## யாழில் விரிவுரையாளர் வீட்டில்
# எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது
### மனைவி காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துன்னாலை பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதால், விரிவுரையாளரின் மனைவி சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

15

## 2022 - யாழ்.மாநகர பட்ஜெட்டை
# எதிர்த்து வாக்களிக்க கூட்டமைப்பு முடிவு?
### விவாதத்தின் பின் ஈபிடிபி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இன்று புதன்கிழமை மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் முன்வைக்கவுள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்பட்ட நிலையில் இன்று சபைக்கு வருகிறது.

இந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதே நிலைப்பாட்டுடன் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டாலும் இன்றைய சபை நடவடிக்கையின்போது தமது கட்சியின் முடிவை அறிந்து கொள்ளுமாறு அதன் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

15

# யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் இன்று
## விவாதத்தை தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதம் இன்று நடைபெறவுள்ளது. பட்ஜெட்டுக்கான விவாதத்தைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்படும்.**

யாழ்.மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டத்தையும் தோற்கடிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமாக இருந்தால் மாநகர சபை கலையக்கூடிய வாய்ப்பு

15

## மன்னார் கடலில் காணாமல்போன 2ஆவது மீனவரும் சடலமாக மீட்பு

(மன்னார்)

மன்னார் கோந்தைப்பிட்டி கடற்பரப்பில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் காணாமல்போன நிலை

15

# டொலர் தட்டுப்பாட்டை நீக்க நட்பு நாடுகளுடன் பேச்சு
### நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டை போக்குவதற்காக இந்தியா, ஜப்பான், சீனா உட்பட நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக

15

## கொரோனா
# 20 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாவுக்கு மேலும் 20 பேர் பலியாகியுள்ளதாக அறி

15

## லிட்ரோ இறக்குமதி செய்த
# எரிவாயுவை திருப்பி அனுப்பத் தீர்மானம்
### நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விநியோக நிறுவனம் கடந்த சனிக்கிழமை

15

## லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு
### நீதிமன்றம் இன்றுவரை கால அவகாசம்

(கொழும்பு)

எரிவாயு செறிவு மற்றும் அதனை கொள்கலன்களில் காட்சிப்படுத்தக்கூடிய

15

## திடீர் காய்ச்சல்
# 3 பிள்ளைகளின் தாய் கிளிநொச்சியில் மரணம்

(கிளிநொச்சி)

திடீர் காய்ச்சல் காரணமாக கிளிநொச்சியில் இளம் குடும்பத்தலைவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தைச்சேர்ந்தமூன்று பிள்ளைகளின் தாயா

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும்

## தெய்வீக கலையரங்கு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 16.12.2021 வியாழக்கிழமை பி.ப 4.00 மணி

**நிகழ்வுகள்**

- **வேதபாராயணம் :** ஈழத்து வேத விற்பன்னர்கள்
- **திருவாசகம் ஓதல் :** "திருவாசகக்குயில்" **காரை லீலாவதி இராசரத்தினம்**
- **சிந்தனைக்கு ஒரு விருந்து** -திரு. **ந.கணேசமூர்த்தி**
- **சொற்பொழிவு :** செஞ்சொற்செல்வர், கலாநிதி **ஆறு. திருமுருகன்** அவர்கள். தலைப்பு:- " **உலப்பிலா ஆனந்தம்** "
- **நாட்டிய அர்ப்பணம் :** வழங்குபவர்: நுண்கலைமாணி **ஆனந்தகிருஸ்ணன் ஶ்ரீகாந்**
- **வில்லிசை :-"பார்வதி கல்யாணம்"** வழங்குபவர்: **கலைவாணர்** வில்லிசைக்குழு **சின்னமணியின் சிஷ்யர்**

(C-3260)

**குறிப்பு :**

- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப 3.00 மணிக்கு ( இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம்) ஆரம்பமாகும். (யாழ். வண்ணை சிவன் கோயில் அருகாமை)
- நிகழ்வுகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்க நினைக்கும்

# இந்தியாவின் 13 ஆம் திருத்தத்தை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை ஒற்றையாட்சிக் குள் முடக்க நினைக்கும் இந்தியா வின் 13ஆம் திருத்தத்தை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பின ருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தெரிவித்தார்.


நேற்றையதினம் செவ்வாய்க் கிழமை யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவரது கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கொழும்பில் சில தமிழ் தேசியக் கட்சிகள் கூட்டங்களை நடத்துகின்றன. அதில் நாம் பங்கேற்காத நிலையில் அதற்கான காரணங்களை தெளிவு படுத்த விரும்புகிறேன்.

30 வருடங்களுக்கு மேலாக நடை முறைப்படுத்த முடியாத 13ஆம் திருத் தத்தை சிலர் தமது எஜமான்களைத் திருப்திப்படுத்துவதாக நினைத்து தமிழ் மக்களை ஒற்றையாட்சியின் கீழ் கட்டுப்படுத்தலாம் என முயற் சிக்கின்றனர்.

தமிழ் தேசிய அரசியலில் ஒரு வருடத்துக்குள் பாரிய சதி நடவடிக் கைகள் இடம்பெற்றுள்ளது .

தமிழ் தேசிய மக்கள் முன்ன ணிக்கு தமிழ் மக்களிடம் இருந்து ஆதரவு பெருகிவரும் நிலையில் அதற்கு முன்னதாக ஒற்றையாட் சியின் கீழ் தமிழ் மக்களை கட்டுப்படுத்துவதற்கு கூட்டமைப் பினர் மற்றும் விக்னேஸ்வரன் அணியினர் இணைந்து செயற் பட்டு வருகின்றனர்.



இந்தியா 13ஆவது திருத் தத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கும் நிலையில் அண்மையில் யாழ்ப் பாணம் வந்த வெளியுறவுச் செய லாளரும் 13 தான் தமிழ் மக்க ளுக்கு தீர்வு. சில மாற்றங்களை செய்யலாம் எனவும் கூறியிருந் தார்.

சம்பந்தனும் இந்தியா வலியு றுத்துகின்ற 13ஆவது திருத் தத்தை நாம் ஏற்றாக வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே உள்ள நிலையில் அவர் அதனை பல இடங்களில் சுட்டிக் காட்டியிருக் கிறார் என்றார். (ம-104)

# கடற்படையினரின் வாகனம் மீது யாழில் கல்வீச்சு தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தபால் நிலை யத்திற்கு முன்னால் நிறுத்தப்பட் டிருந்த கடற்படைக்கு சொந்த மான வாகனம் மீது நேற்று மாலை கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இனந்தெரியாத நபர் ஒருவர் அவ்வழியால் வந்து குறித்த வாகனத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார். இதனால் வாக னத்தின் முன்பக்க கண்ணாடி பகுதியளவில் சேதமடைந்துள் ளது.

யாழ். பொலிஸார் இது தொடர் பான விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-104)

**பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

## கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்


பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) சங்கத்தின் 13 கிளை களுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் 2021.12.18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறும்.

| தொ. இல | கிளை. இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 01 | மாதகல் | திரு.சின்னத்துரை குணாளன் | பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மாதகல் வெங்காய களஞ்சிய மண்டபம் |
| 02 | 02 | மாதகல் மத்தி | திரு.வேதநாயகம் பிரதீஸ்குமரன் | மாதகல் மத்தி கிளை மேல் மாடி மண்டபம் |
| 03 | 03 | மாதகல் பரிஷ் | திரு.கந்தசாமி சசிகரன் | புனித தொமையார் சனசமூக நிலைய மண்டபம் |
| 04 | 04 | மாதகல் நுணசை | திரு.அரியரட்ணம் வசிகரன் | மாதகல் நுணசை வித்தியாலய மண்டபம் |
| 05 | 05 | மாரிசன்கூடல் | திரு.சற்குணசிங்கம் பிறேமிலன் | மாரிசன்கூடல் கிளை நிலையம் |
| 06 | 06 | பெரியவிளான் | திரு.செகராசா பகீரதன் | பெரியவிளான் கிளை நிலையம் |
| 07 | 07 | சித்திரமேழி | திரு.இராஜசிவம் தனுசன் | சித்திரமேழி பழனியானந்தர் சனசமூக நிலைய மண்டபம் |
| 08 | 08 | சரஸ்வதி | திரு.நாகலிங்கம் குமணதாசன் | பிரான் முருகமூர்த்தி கோயில் மண்டபம் |
| 09 | 09 | பண்டத்தரிப்பு | திரு.சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | தலைமை அலுவலக மண்டபம், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம் |
| 10 | 10 | சில்லாலை | திரு.பாலச்சந்திரன் பாலரவி | சில்லாலை கிளை நிலைய கட்டடம் |
| 11 | 11 | வடலியடைப்பு | திரு.தங்கராசா கண்ணதாசன் | வடலியடைப்பு சனசமூக நிலையம் |
| 12 | 12 | இளவாலை | திரு.மயில்வாகனம் கபிலன் | இளவாலை கிளை நிலைய கட்டடம் |
| 13 | 13 | பாரத்தனை | திரு.பரமசிவம் தவப்பிரியன் | வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் |

13 கிளைகளுக்குமான கிளைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் கூட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுடைய அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவர்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கூட்டங்களுக்கு உரிய நேரத்தில் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

15.12.2021
பண்டத்தரிப்பு. (C-3258) பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## மரண அறிவித்தல்



# பொன்னையா சிவலிங்கம்

நல்லூர் அரசடியைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி 2ஆம் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சிவலிங்கம் அவர்கள் நேற்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மக னும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் உதயசேகர், ஞான சேகர், ஜெயசேகர், விஜயநிர்மலா (இந்தியா), சந்திரசேகர், விஜயசேகர் (இந் தியா), சந்திரகலாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.12.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(9079)

பலாலி வீதி
2ஆம் ஒழுங்கை (ஆரியகுளம்)

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் ஆணைக்குழுவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டம்

**(நெளுக்குளம்)**

**ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் திருப்தியில்லை எனத் தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**





நேற்றுக் காலை 11.30 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் திணிக்காதே திணிக்காதே ஆணைக்குழுக்களை திணிக்காதே, போராடுவோம் போராடுவோம் நீதி கிடைக்கும் வரை போராடுவோம், வேண்டாம் வேண்டாம் மரணச் சான்றிதழ் வேண்டாம், வேண்டாம் வேண்டாம் இழப்பீடும் வேண்டாம், வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பதாகைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் சிவானந்தம் ஜெனிதா கருத்து தெரிவிக்கையில்,

எந்தவித ஆணைக்குழுக்களும் தேவையில்லை, உள்ளக விசாரணைகளும் தேவையில்லை, சர்வதேச விசாரணையே தேவையென 12 வருடமாகப் போராடி கூறிக்கொண்டு வருகிறோம். எத்தனையோ ஆணைக்குழுக்கள் வந்தும் பதிவுகளை மேற்கொண்டு செல்கிறார்களே தவிர எந்தவிதமான நீதியும் வழங்கப்படவில்லை.

தொடர்ச்சியாக அதே வேலையைத் தான் செய்கின்றார்கள்.

எங்களுக்கு நீதியே கிடைக்க வேண்டும், சர்வதேச விசாரணையே வேண்டும் என மேலும் தெரிவித்தார். (நி-299)

# உர இறக்குமதியில் தனியார் தயக்கம்

(கொழும்பு)

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையினர் தயக்கம் காட்டுவதாக இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

மேலும் அவரது கருத்தில், இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை விற்பனை செய்ய முடியாது என்ற அச்சத்தில் குறித்த நிறுவனங்கள் இரசாயன உரங்களை இறக்குமதி செய்யத் தயங்குவதாக தெரிவித்தார்.

உரப் பிரச்சினை தொடர்பில் அநுராதபுரம் - திறப்பனை - உலங்குளம் விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி)

# இந்தியா, சீனா உதவினால் மட்டுமே பொருளாதாரத்தில் இருந்து மீளமுடியும்

## பாராளுமன்ற உறுப்பினர் எரான்

(கொழும்பு)

இந்தியா அல்லது சீனா எமக்கு ஏதேனும் உதவிகளை செய்தாலே தவிர வேறு எந்தவொரு வழியிலும் எம்மால் மீள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் நாடு பாரிய நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில் புதிய வேலைத்திட்டமொன்றை உருவாக்கி அதன்மூலம் சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கும் பொறிமுறை என்னவென்பது அரசாங்கத்திற்கு தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றாலும் எம்மால் சாதகமான ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாது.

இப்போது மிகக் குறைவான வெளிநாட்டு கையிருப்பே எம்மிடம் உள்ளது.


1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற மிகக் குறுகிய தொகையை எமது கையிருப்பில் வைத்துக் கொண்டு பொருளாதாரத்தை இயக்க முடியாது.

அடுத்த ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி 500 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அடுத்த கட்டங்களில் அதிகளவான கடன்களை செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே இப்போது உள்ள நிலைமைகளை அவதானிக்கும்போது இந்தியா அல்லது சீனா எமக்கு ஏதேனும் உதவிகளை செய்தாலே தவிர வேறு எந்தவொரு வழியிலும் எம்மால் மீளமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# மணிவண்ணனின் ஆளுமை எம்மக்களுக்குத் தேவை

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்





(யாழ்ப்பாணம்)

வரவு- செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதால் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனை வெளியேற்றலாம் என்ற எண்ணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை அறிய முடிகிறது.

மக்கள் பிரதிநிதிகள் தங்கள் சொந்த நலன்களுக்கு, விருப்பு வெறுப்புகளுக்கு முதலிடம் கொடுப்பதால்தான் இவ்வாறான சிந்தனைகள் மேலோங்குகின்றன. யாழ்.மக்களின் நலன் பற்றியோ, வருங்காலம் பற்றியோ சிந்திக்காது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

மணிவண்ணன் எங்கள் கட்சி உறுப்பினர் அல்ல. ஆனால் அவர் மக்களுக்குச் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர். தமிழ் மக்கள் சிந்தனையை தகுந்த விதத்தில் உள்நாட்டவர்களிடமும் வெளிநாட்டவர்களிடமும் கொண்டு செல்லக் கூடியவர்.

அவரின் திறனும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மற்றைய உறுப்பினர்கள் எத்தனை பேரிடம் இருக்கின்றது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறும் கட்சி சார்பான முரண்பாடுகளால் ஒரு தகுதி வாய்ந்த மாநகர முதல்வரை இழக்க நாங்கள் இடம் அளிக்கக்கூடாது.

இந்தக் காலகட்டம் நெருக்கடிமிக்கது. அறிவு [illegible] அதிகாரம் கொண் [illegible] நாங்கள் பதவி இழக்கச் செய்தோமானால் அரசாங்கத்தின் கரவான நடவடிக்கைகளைக் கண்டிக்க முடியாமல் போய்விடும். எனக்கு மணிவண்ணனைத் தனிப்பட்ட முறையில் அதிகம் தெரியாது. ஆனால் அவரின் செயல்கள், பேச்சுக்கள் அவரை எனக்கு அடையாளப் படுத்தியுள்ளன.

தயவுசெய்து பதவியில் இருக்கும் மாநகர முதல்வரை கட்சிக் காரணங்களுக்காக வெளியேற்றாதீர்கள் என்று சகல யாழ். மாநகர சபை உறுப்பினர் [illegible] முன்வைக்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-33)

# ஜனாதிபதி செயலர் பதவியிலும் மாற்றம்?

(கொழும்பு)

ஜனாதிபதி செயலாளர் பதவியிலிருந்து பி.பீ. ஜயசுந்தரவை உடனடியாக நீக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுப்பதற்கு அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்த்தன உட்பட மேலும் சில அமைச்சர்களும் ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுமே இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கவுள்ளனர்.

இதன்பிரகாரம் ஜனாதிபதி செயலாளர் பதவியில் விரைவில் மாற்றம் வரவுள்ளது எனவும் புதிய ஜனாதிபதி செயலாளராக முன்னாள் அமைச்சரவைச் செயலாளரான அமரசேகர நியமிக்கப்படவுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமரசேகர தற்போது தென்னாபிரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்ட எல்லே போட்டி

## இரு பிரிவிலும் யாழ்.அணி வெற்றி



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினரால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான ஆண்கள், பெண்களுக்கான எல்லே போட்டியில் இரு பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது.

இதில் யாழ்.மாவட்ட அணி 5:4 என்ற ஓட்ட எண்ணிக்கையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3 ஆம் இடத்தை வவுனியா மாவட்ட அணி பெற்றது.



பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது.

இதில் யாழ்.மாவட்ட அணி 5:2 என்ற ஓட்ட எண்ணிக்கையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3 ஆம் இடத்தை வவுனியா மாவட்ட அணி பெற்றது. (4-90)

# ரோஹித் சர்மா நீக்கம்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து ரோஹித் சர்மா நீக்கப்பட்டதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் உறுதிப்படுத்தியுள்ளது.

ரோகித் சர்மாவுக்கு பதிலாக 18 பேர் கொண்ட இந்திய அணியில் பிரியங்க் பஞ்சால் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

மும்பையில் ஞாயிறன்று முன்னெடுக்கப்பட்ட பயிற்சி நடவடிக்கையின் போது ரோஹித் சர்மாவிற்கு காயம் ஏற்பட்டது.

இதன் காரணமாக அவர் தென்னாபிரிக்காவுடனான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இருந்து நீக்கப்பட்டதாக பி.சி.சி.ஐ. உறுதி செய்துள்ளது. (4)

# நடுவர்களுக்கான செயலமர்வு

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான தரம் A மற்றும் தரம் B எழுத்துப் பரீட்சையில் 2018 ஆம் ஆண்டு சித்தி பெற்றவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் வட மாகாணத்தில் உள்ள அனைத்து தர நடுவர்களும் பங்குபற்ற முடியும் என இலங்கை வலைப்பந்தாட்டச் சங்க உப செயலாளரும் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட நடுவர் சங்கச் செயலாளருமான அபிதா வாகீசன் அறிவித்துள்ளார். (5-90)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2469

### கேதீஸ்வரா



ஒரு கல்லை எடுத்து ஒரு நாயை பார்த்து வீசினால் அது பயந்து ஓடி விடும், அதே கல்லை ஒரு தேன்கூட்டை நோக்கி வீசினால் நாம் பயந்து ஓட வேண்டும்.
பலம் வாய்ந்த நாயை விட பலம் குன்றிய தேனீக்கள் நம்மை ஓட வைப்பதற்கு காரணம்
அது ஒற்றுமையாக நம்மை துரத்துவதால் தான்
எந்த இனமாக இருந்தாலும் சரி ஒற்றுமையாக இருந்தால் தான் எதையும் சாதிக்க முடியும்

### செந்தூரன்



இந்த புது வருடத்துல என்ன பண்ணலாம்?



ரொம்ப யோசிக்காதீங்க இந்த புது வருடம் நம்மள என்ன பண்ணலாம்னு ஆல்ரெடி யோசிச்சு வைச்சிருக்கும்.

### தாரணி

நல்லா படிச்சு வாழ்க்கையில "ஒரு ஸ்டேட்ஸ்க்கு வரணும்" னு ஆசைப்பட்டவங்கலாம், இப்ப என்ன பண்ணிட்டு இருக்காங்க கோபி



வாழ்க்கையில் நடக்குற எல்லாத்தையும் வாட்ஸப் ஸ்டேட்டஸா வச்சிட்டு இருக்காங்க

### கிந்துஜா

காலை 6 மணிக்கு வரவேண்டிய எனர்ஜி, சுறுசுறுப்பு எல்லாம் மாலை 6 மணிக்குத்தான் வருது.



இரவு 2 மணிக்கு கூட வராத தூக்கம் மதியம் 2 மணிக்கு வருது இதெல்லாம் எங்க போய் முடியப்போகுதோ

### கீர்த்திகா

அட்வான்ஸ் ஹப்பி நியூ இயர் அண்ணாச்சி..



கலண்டர் தானே. அடுத்த வாரம் தான் வரும் அப்போ வந்து வாங்கிட்டு போ...

### சஸ்வின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி... www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

15.12.2021
கார்த்திகை 29, புதன்கிழமை
துவாதசி பின்னிரவு 4.15 மணிவரை
அச்சுவினி காலை 7.43 மணிவரை
சுபநேரம்- 4.51-6.21 மணிவரை
இராகு காலம்- 12.21-1.51 மணிவரை
சந்திராஷ்டமம்- அத்தம்

வளவன்

**மேஷம்** — ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், குடும்பத்தினர் உங்கள் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், வேலைச்சுமை கூடும், நல்லவர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** — சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மிதுனம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** — கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களை நாடி வரலாம், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்** — கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம்.

**கன்னி** — ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்** — பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்,பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செய் தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** — சுவாரஸ்யமான சம்பவங்கள் நடைபெறலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** — எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்** — உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறும் நிலையுண்டு.

**கும்பம்** — மூத்த சகோதரர் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது,பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**மீனம்** — விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

சோகம் என்பது மகிழ்ச்சி என்ற நீருக்காக உனக்குள் சுரக்கும் தாகம்.

## சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா?
# குழப்பத்தில் ராஜபக்ஷ அரசு

(கொழும்பு)

நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடும் விவகாரத்தில் இலங்கை அரசு 'மதில் மேல் பூனை' நிலைப்பாட்டிலேயே இருந்து வருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே சிறந்த வழியென அரசிலுள்ள ஒரு சிலரும், அவ்வாறானதொரு தேர்வுக்கு அரசு சென்றுவிடக்கூடாது என மற்றுமொரு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளை நிறைவேற்ற முற்பட்டால் அது உள்நாட்டில் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்து, ஸ்தீரமற்ற தன்மையை உருவாக்கும் என்பதே, 'வேண்டாம்' என வலியுறுத்தும் தரப்பின் கருத்தாக உள்ளது.

ஆனால் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகள் கூட இலங்கைக்குப் பாரிய தொகை கடன்களை வழங்குவதற்கு தயக்கம் காட்டும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே ஒரே வழி எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் நெருக்கடி நிலை உருவாகும் எனவும் 'வேண்டும்' என வலியுறுத்தும் தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஐ.எம்.எப். விவகாரம் பற்றி ஆராயப்பட்டது. எனினும், இறுதி முடிவு எட்டப்படவில்லை.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்த விடயம் தொடர்பில் கடும் குழப்பத்தில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பில்
# தபால் சேவைகள் பாதிப்பு

(கொழும்பு)

தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தினால், தபால் சேவைகள் பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

16 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, தபால் சேவை ஊழியர்கள், நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையினை நேற்று முன்தினம் முதல் நேற்று நள்ளிரவு வரை முன்னெடுத்தனர்.

அகில இலங்கை தபால் சேவை மற்றும் தொலைத் தொடர்பு ஊழியர்கள் ஒன்றிணைந்து இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கமைய, புதிய சேவை சட்டமூலமொன்றை ஸ்தாபித்தல், சனிக்கிழமை கொடுப்பனவில் 20 வீதத்தை வழங்குதல், வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற 16 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (நி)


# 1ம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு



எமது குடும்பத் தலைவர்

## அமரர். கந்தையா இந்திரன்

கடந்த 27.11.2020 இல் இறைபதம் அடைந்த
எமது குடும்ப ஒளி விளக்கு அமரர். கந்தையா இந்திரன்
அவர்களின் 1ஆம் ஆண்டு ஆத்ம சாந்திக் கிரியைகள்
15.12.2021(புதன் கிழமை) இன்று நண்பகல்
12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.
ஆத்ம மோட்ச சாந்தி பிரார்த்தனையிலும் மற்றும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

'தமிழ் வளர்சோலை'
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. (C-3253) குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைந்து செயற்படுவோம்

## வடக்கு ஆளுநர் அழைப்பு

(அராலி)

**மனித வாழ்க்கையினை எளிதாக்கும் மதங்கள் மற்றும் உரிமைகளின் உலகளாவிய அம்சங்களை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அழைப்பு விடுத்துள்ளார்.**

மனிதர்கள், மொழிகள், மதங்கள் மற்றும் கலாசாரங்கள் ஆகியவற்றின் மூலம் தெற்காசிய நாடுகள் வளம் பெற்றுள்ளன.

இந்த நாடுகளில் அடிப்படை சுதந்திரங்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் பல சட்டங்கள் மற்றும் சட்டப்பாதுகாப்புகளும் உள்ளன.


மத மரபுகளின் ஆதரவு, மனித உரிமைகளுக்கான அடிப்படையை வழங்குவது மட்டுமல்லாமல், மனித உரிமைகளின் தேவைகள், பல்வேறு மத மற்றும் கலாசார மரபுகளின் தார்மீக மற்றும் ஆன்மிக மொழிக்கு பரிமாற்றுவதற்கு காரணமாகிறது. அதிகமான மக்கள் இந்த உரிமைகளை தங்கள் பாரம்பரியமாகக் கோருவதற்கு உதவுவதோடு மற்றும் அடிப்படை மனித உரிமைகளின் தற்போதைய உலகளாவிய அங்கீகாரத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

ஆசியாவில் உள்ள மதங்களின் புனித நூல்களில் உள்ள பொதுவான அம்சங்கள் மற்றும் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையின் அடிப்படையில் மனித உரிமைகள் கட்டியெழுப்பப்படும்.

சுதந்திரமான சமுதாயத்தில் மக்கள் திறம்பட பங்கேற்க உதவுதல் மற்றும் அனைத்துக் குழுக்களிடையேயும் புரிதல், சகிப்புத்தன்மை மற்றும் நட்பை ஊக்குவித்தல் மற்றும் அமைதியைப் பேணுதல் ஆதி அம்சங்களைக் கொண்ட வடக்கை கட்டியெழுப்புவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க முன்வருமாறு ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார். (5-4-104)



பலாலி அன்ரனிபுரம் வனத்து அந்தோனியார் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலி அன்ரனிபுரம் வனத்து அந்தோனியார் தேவால்யத்தில் இடம் பெற்றது.



கிராம உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அரச கடமைகள் மிகவும் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறன் வாய்ந்ததாக மேற்கொள்வதற்காக ஒழுங்கு முறையிலான பயிற்சிகளை வழங்கும் நோக்கமாக் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் கிராம உத்தியோகத்தவர்க ளுக்கான பயிற்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார (படம்:-ரவிசாந்)

# யாழ்.மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை அரியாலை கலைமகள் வீதி காந்தி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.


வட்டாரம் 8,9,10,11 மற்றும் ஏனைய வட்டாரங்களிற்கான பெயர் மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல், ஆதனவரி அறிவித்தல் மற்றும் அவை தொடர்புபட்ட ஆலோசனைகள் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்வதுடன் அனைத்து வட்டாரங்களினதும் இதுவரை காலமும் செலுத்தப்படாதுள்ள சோலைவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு சோலை வரி, பொது நீர்க்கம் பங்களிற்கான கட்டண அறிவீடுகள், தனியார் நீர் இணைப்புக்களின் நிலுவை போன்றவற்றை செலுத்துமாறு யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (5)

## சடலங்களை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த முதலாம் திகதி விடுதி இல.8 இல் அனுமதிக்கப்பட்டு மறுநாள் இறந்த பெயர், முகவரி, தெரியாத ஒருவரின் சடலமும், புலோலி வடக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த 81 வயதுடைய குணரட்னம் கருணாகரலிங்கம் என்பவரது சடலமும் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளன.

எனவே குறித்த இரு சடலங்களை உரிமையாளர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா அறிவித்துள்ளார். (4-5)





அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகரும் சங்கத்தின் நீண்டகாலத் தலைவருமான அமரர்.எஸ்.ரி. பத்மநாதனின் "நினைவுச் சங்கமம்" நிகழ்வு அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சு.சண்முகரத்தினம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை மயிலு மீனாட்சி மண்பத்தில் நடைபெற்றது.

அத்துடன் அமரரின் நினைவாக நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது.

# சாவகச்சேரி நகரில் மணிக்கூட்டுக் கோபுரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் மணிக்கூட்டு கோபுரம் அமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் அனுமதி பெற சாவகச்சேரி நகரசபை தீர்மானித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நகர சபையின் பொன் விழா மண்டபத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே நகரசபை உறுப்பினர் க.கஜிதனால் குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

உறுப்பினரின் கோரிக்கையை அடுத்து சாவகச்சேரி நகரில் தற்போது நகர சுற்று வட்டம் அமைந்துள்ள இடத்தில் மணிக்கூட்டு கோபுரம் நிறுவுவதற்கான அனுமதியை தரக்கோரி கடிதம் ஒன்றினை வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு அனுப்பி வைக்க நகரசபை தவிசாளர் தீர்மானித்துள்ளார்.(5-4-30)

## நகரசபை உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டில் வீதிகள் புனரமைப்பு

(சாவகச்சேரி)


சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளையின் நிதி ஒதுக்கீடுகள் ஊடாக நகரசபை எல்லைக்குட்பட்ட சாங்கத்தானை வட்டாரத்தில் 31 இலட்சம் ரூபாயில் நான்கு வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (5-30)





இறைவன் பிரம்மாவின் ஆணவம் நீங்கும் வண்ணம் அவரது ஐந்தாவது தலையை கிள்ளி அகற்றி, நான்முகனாக்கிய நிகழ்வு அட்டவீரச்செயல்களுள் ஒன்றாக குறிப்பிடப்படுகிறது. 'பரமனை மதித்திடா பங்கையாசனன் ஒரு தலை கிள்ளியே..' என்று இந்நிகழ்வை புராணம் பேசும். ஆணவம் அகற்றி அருளொளி பரப்பிய இந்த திருவிளையாடல் நேற்று முன்தினம் நல்லூர் சிவன் கோயிலில் உற்சவமாக நிகழ்த்தப்பட்டது.

(படங்கள்:- [illegible])



கலாபூஷணம் எம்.ஏ.எம். நிலாமின் "தட்டுத் தாவாரம்" நூலின் அறிமுக விழா தாருஸ்ஸலாம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன் எழுத்தாளர் யாழ்.இக்பாலுக்கு முதல் நூலை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களுக்கான மரண தண்டனை தொடர்பான குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம்

## நீதி அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கையின் குற்றவியல் நடைமுறை தொடர்பான சட்டத்தின் 281 ஆவது பிரிவைத் திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதிமன்றத்தின் தத்துவப்படி குற்றமிழைக்கும் சந்தர்ப்பத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு நபருக்கும் மரண தண்டனையை விதிக்கக் கூடாது.

இதற்குப் பதிலாக ஜனாதிபதி விரும்பும் வரை தடுப்புக் காவலில் வைத்திருக்கும் வகையில் தண்டனைச் சட்டக் கோவையில் 53 ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், 18 வயதுக்குக் குறைவாக இருப்பின் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாதெனக் கூறும் ஏற்பாடுகள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 281 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்படவில்லை.

அதனால், நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மையை நீக்குவதற்காக குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தில் குறித்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென இனங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 281 ஆவது உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)


## மாடிவீடு வாடகைக்கு

கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலைக்கு அருகாமையில் (அறிவியல் நகர் பிரதேசத்திற்கு அண்மையாக) புதிதாக கட்டப்பட்ட மாடிவீடு ஒன்று வாடகைக்கு உள்ளது. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்களுக்கு பொருத்தமானது. தேவையானவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (C-3255) **077 065 0875**

## மணிவிழா வாழ்த்து

எமது பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியராக பணியாற்றி 20.08.2021 அன்று ஓய்வு பெற்ற

திருமதி.
**ஜெனற் கிளசிற்றஸ் அன்ரன் விமலதாசன்**
(ஆரம்பக் கல்வி ஆசிரியர்)



அவர்தம் சேவையைப் பாராட்டுவதுடன் தமது ஓய்வுக் காலத்தில் மகிழ்வுடனும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

Best Wishes

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/ எழுவைதீவு R.C.T.M.S. | 1988.09.21-1991.12.31 |
| யா/ மண்டைதீவு R.C.T.M.S. | 1992.01.01-1994.08.31 |
| யா/ புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித்தி | 1994.09.01-1995.08.31 |
| யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | 1995.09.01-2001.02.14 |
| யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி | 2001.02.15-2001.05.03 |
| யா/ புனித மரியாள் வித்தியாலயம் | 2001.05.04-2011.09.20 |
| யா/ புனித சாள்ஸ் ம.வி. | 2011.09.21-19.08.2021 |

(9068)

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியராக பணியாற்றி 29.02.2021 அன்று ஓய்வு பெற்ற

திருமதி.**புனஜா பவப்பிரியன்** (பயிற்றப்பட்ட விஞ்ஞானம்)



அவர்தம் சேவையைப் பாராட்டுவதுடன் தமது ஓய்வுக் காலத்தில் மகிழ்வுடனும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**சேவை விபரம்**

| | |
|---|---|
| கிளி/ சிவநகர் அ.த.க.பாடசாலை | 1999.02.01-2006.06.18 |
| யா/ விக்ரோறியாக் கல்லூரி | 2006.06.19-2014.01.02 |
| யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம் | 2014.01.03-2018.06.26 |
| யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் | 2018.06.22-2021.02.28 |

(9067)

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

Best Wishes

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா:செவ் 5 சூரி7ல் உயரம்:5'8"
தகைமை/தொழில்: பொறியியலாளர் உப கட்டட ஒப்பந்தகாரர்
எதிர்பார்ப்பு: வைத்தியர், கணக்காளர் மட்டும்
தொ.இ: B/12186

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ்8 சூரி 9இல்
தகைமை/ தொழில்: கணனி ஆசிரியர்
எதிர்பார்ப்பு:படித்தபெண்ஆசிரியர், தனியார் உத்தியோகம் விரும்பத்தக்கது.
தொ.இ: B/12187

பிறப்பு:1985 இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா:42 ½செவ் 2 சூரி1 இல் உயரம்:5'4"
தகைமை/தொழில்: A/L கட்டாரில் இருந்து வந்து ஊரில் பலசரக்குக் கடை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12188

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா:34 ¼ செவ் 8 சூரி 11 இல்
உயரம்:6'
எதிர்பார்ப்பு:உள்நாட்டு வெளிநாட்டுப்பெண்
தொ.இ: B/12190

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:-14 செவ்11 சூரி 1 இல் உயரம்:5'
தகைமை/தொழில்:. M.Sc, B.Sc நூலக உதவியாளர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச அல்லது தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12077

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி.பா:30 செவ் 12 சூரி 11 இல் உயரம்:158 cm
தகைமை/தொழில்:விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:பட்டம் முடித்துதொழில்புரிபவர் உள்நாடு மட்டும்.வெளிநாடு ஆயின் சிங்கப்பூர் அல்லது மத்திய கிழக்கு நாடுகள் ஏற்றுக் கொள்ளப்படும்
தொ.இ:G/12078

பிறப்பு:1992இந்து நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா:46 செவ்7 சூரி 12இல்
தகைமை/தொழில்:வைத்தியர் MBBS
எதிர்பார்ப்பு:வைத்தியர் பொறியியலாளர்
தொ.இ:G/9634

பிறப்பு:1994 இந்து நட்சத்திரம்: சித்திரை
கி.பா:- 59 செவ் 8சூரி 11 இல் உயரம்:157 cm
தகைமை/தொழில்:. International Business Management Student
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (ஐரோப்பா நாடுகள் விரும்பத்தக்கது) பட்டதாரி
தொ.இ:G/12080

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

## மணிவிழா வாழ்த்து

29 ஆண்டுகளாக ஆசிரியப் பணியை சிறப்பாக ஆற்றி மணிவிழாக்காணும் நாயகியை வாழ்த்துகின்றோம்

**திருமதி. சாந்தினி கணேசமூர்த்தி**
(B.A.Dip. in. Edu.Dip.in SE)



அவர்களின் மணிவிழா நாளில் அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்

Best Wishes

**சேவை விபரம்**


| | |
|---|---|
| யா/ யூனியன் கல்லூரி, ஆசிரியர் | - 01.09.1992-19.06.1996 |
| கிளி/ கனகாம்பிகை அ.த.க.பாடசாலை, ஆசிரியர் | - 07.05.1996-05.11.1996 |
| மு/ மாங்குளம் மகா வித்தியாலயம், ஆசிரியர் | - 06.11.1996-31.08.2001 |
| மு/ அனிச்சயன்குளம் அ.த.க.பா, ஆசிரியர் | - 01.09.2021-19.01.2003 |
| யா/ யூனியன் கல்லூரி, ஆசிரியர் | - 20.01.2003-08.01.2012 |
| யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, ஆசிரியர் | - 09.01.2012-இன்று வரை |

(9060)

வாழ்க வளமுடன் என வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகுவடோரில் கோர விபத்து 18 பேர் உடல் நசுங்கிப் பலி!



(ஈகுவடோர்)

ஈகுவடோர் நாட்டில் பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈகுவடோர் நாட்டின் தெற்கு பகுதியில் 40இற்கு மேற்பட்ட பயணிகளுடன் புறப்பட்ட பேருந்து எதிர்பாராத வகையில் திடீரென கட்டுப்பாட்டை இழந்தது.

அதிவேகமாக பேருந்து வீதியை விட்டு நகர்ந்து சென்றபோது, பயணிகள் அனைவரும் பயத்தில் மரண ஓலமிட்டு கதறியதாக அப்பகுதியில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் சாரதி பேருந்தை நிறுத்த எவ்வளவோ முயற்சித்தார். ஆனால் அவரது முயற்சி பலனளிக்கவில்லை. இதைத் தொடர்ந்து, பேருந்து வீதியை விட்டு விலகி வீதியோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குழந்தைகள், பெண் கள் உட்பட 18 பேர் ஸ்தலத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். (நி)

# பொருளாதார நெருக்கடியால் கார் சாரதியாக பணியாற்றினேன்

## மனம் திறந்தார் ரஷ்ய ஜனாதிபதி



(மொஸ்கோ)

30 ஆண்டுகளுக்கு முன்பு பொருளாதார நெருக்கடியால் கார் சாரதியாக பணியாற்றியதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

சோவியத் ஒன்றியத்தின் உளவுப் படையில் பணியாற்றிய ரஷ்யாவின் தற்போதைய ஜனாதிபதி புடின் இப்போதும் சோவியத் ஒன்றியத்தின் கோட்பாடுகளை நம்புகிறார்.

இந்த நிலையில் சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியின் போது, பொருளாதார நெருக்கடியின் காரணமாக தான் கார் சாரதியாக பணியாற்றியதாக புடின் தற்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியை மிகப்பெரும் அரசியல் பேரழிவாக கருதுகிறேன்.

உண்மையைச் சொல்ல வேண் டும் என்றால் இது குறித்துப் பேசுவதில் எனக்கு விருப்பமில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதுதான் நடந்தது.

சோவியத் ஒன்றியத்தின் சரிவு என்பது வரலாற்று ரஷ்யாவின் முடிவை உணர்த்துகிறது. 30 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட சோவியத் யூனியன் வீழ்ச்சி என்பது பெரும்பாலான பொதுமக்களுக்கு மிகப் பெரிய சோகமாகவே இருந்தது.

அந்த நேரத்தில் நான் கூடுதல் பணம் சம்பாதிக்க வேண் டியிருந்தது. இதற்காக நான் தனியார் நிறுவனத்தில் கார் சாரதியாக பணியாற்றினேன் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)


# பெறுகை அறிவித்தல்

## சபைநிதி வேலைத்திட்டம்-2021

## நகராட்சி மன்றம்- சாவகச்சேரி

01. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவேலைகளுக்காக கோருகின்றார். தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

02. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் **(CIDA)** பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

03. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule)** கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்,பெறுகைக் குழு,நகராட்சிமன்றம், சாவகச்சேரி தொலைபேசி- 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2021.12.15 ஆம் திகதியிலிருந்து 2021.12.28 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணமொன்றை தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் 2021.12.15 ஆம் திகதியிலிருந்து 2021.12.28 ஆம் திகதிவரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து கோரப்படும் ஆவணங்களுடன் தனித்தனியாக இரு உறைகளில் இட்டு தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 2021.12.28 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லதுஅவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டபிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

08. கீழ்காட்டப்படும் கேள்விகளில் கேள்வி எண் 01 கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று 2022.03.01) நாள்கள் வரையும் செல்லுபடியாகும் ஏனைய கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2022.02.15) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

09. சமர்ப்பிக்கப்பட்டகேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்குஅதிகாரம் உண்டு.

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2021.12.22 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

11. கலந்துகொள்ளும் நபர்கள் நாட்டில் காணப்படும் அசாதாரண சூழ்நிலையை கருத்தில்கொண்டு உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப் பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணைவைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(3)2/ CF/32/2021 | சிறுவர் பூங்கா காணிக்கு தடுப்புச் சுவர் அமைத்தல், நுணாவில் மத்தி. | 4.000 | 03 மாதம் | C8/C7 | 40,100.00 | 2022.03.29 |
| 02 | NP/14/41(3)2/ CF/33/2021 | ஐயர் வீதி இரண்டாம் ஒழுங்கை புனரமைப்பு, நுணாவில் கிழக்கு. | 0.365 | 03 மாதம் | C9/C8 | 3,700.00 | 2022.03.15 |
| 03 | NP/14/41(3)2/ CF/34/2021 | மடத்தடி கிழக்கு இரண்டாம் ஒழுங்கை புனரமைப்பு, சங்கத்தானை | 0.473 | 03 மாதம் | C9/C8 | 4,800.00 | 2022.03.15 |
| 04 | NP/14/41(3)2/ CF/35/2021 | இத்தியடிப் பிள்ளையார் வீதி முதலாம் ஒழுங்கை புனரமைப்பு, சங்கத்தானை | 0.543 | 03 மாதம் | C9/C8 | 5,500.00 | 2022.03.15 |
| 05 | NP/14/41(3)2/ CF/36/2021 | கேணியடி முருகன் கோவில் ஒழுங்கை புனரமைப்பு,மீசாலை மேற்கு | 0.547 | 03 மாதம் | C9/C8 | 5,500.00 | 2022.03.15 |
| 06 | NP/14/41(3)2/ CF/30/2021 | கங்காணியார் கோவில் ஒழுங்கை புனரமைப்பு,மீசாலை மேற்கு. | 0.445 | 03 மாதம் | C9/C8 | 4,500.00 | 2022.03.15 |
| 07 | NP/14/41(3)2/ CF/29/2021(R) | திண்மக்கழிவு முகாமைத்துவ பகுதி பாதுகாப்பு அலுவலர் கொட்டகை மற்றும் கேற் அமைத்தல், கோவிற் குடியிருப்பு. | 1.388 | 03 மாதம் | C9/C8 | 13,900.00 | 2022.03.15 |

**தலைவர், பெறுகைக்குழு,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

(C-3256)

**2021.12.15**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோ.சைக்கிள் ஆட்டோ வவுனியாவில் விபத்து

## ஒருவர் படுகாயம்



(வவுனியா)

வவுனியா குட்செட் வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாய மடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம் பெற்ற விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,வவுனியாவிலிருந்து குட்செட் வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளும் குட்செட் பகுதியில் இருந்து நகர் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியும் குட்செட் வீதியில் அமைந்துள்ள கருமாரியம்மன் ஆலயத்தின் அருகே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருகோணமலையை சேர்ந்த கேதீஸ்வரன் (வயது 41) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (5-299)

# வீட்டுத்திட்டங்கள் முழுமையடையாததால் சிரமங்களுக்கு மத்தியில் பயனாளிகள்

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீடற்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படாமையினால் வீட்டுத் திட்டப்பயனாளிகள் தமக்கான வீடுகளை முழுமைப்படுத்த முடியாத நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**

கடந்த 2018 ஆம் மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப்பெறாத வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறான குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய் ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு கரைதுரைப்பற்று வெலிஓயா ஆகிய ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா ஏழரை இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு முதலாம் கட்ட மற்றும் இரண்டாம் கட்ட கொடுப்பனவுகளாக ஒரு இலட்சம் ரூபாய் ஒன்றரை இலட்சம் ரூபாய் என பகுதிக் கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்பட்ட நிலையில் ஏனைய கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வாறு வீட்டுத்திட்ட பயனாளிகள் தமக்கான வீடுகளுக்குரிய கட்டுமானப் பணிகளை தொடங்கிய நிலையில் அவற்றை இடைநடுவில் கைவிட்டுள்ளனர்.

இதே வேளை ஒரு சில பயனாளிகள் வங்கிகளிலும் தனியார் நிறுவனங்களிடமும் கடன்களை பெற்று வீடுகளுக்கான கட்டுமான பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறான பயனாளிகள் தமது வீடுகளை கட்டிமுடிக்க முடியாமலும் வீட்டுக்காக பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாமலும் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். (5-315)

# நானாட்டான் பிரதேச சபை பாதீடு நிறைவேற்றம்

(மன்னார்)

நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் சபை அமர்வு தவிசாளர் தி.பரஞ்சோதி தலைமையில் நேற்று நானாட்டான் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது மேலதிகமாக ஒரு வாக்கைப் பெற்று பாதீடு நிறை வேற்றப்பட்டது. (5-4-285)

# தருமபுரம் மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை

(தருமபுரம்)

கண்டாவளை சுகாதார பணிமனையின் கீழ் உள்ள தருமபுரம் மருத்துவமனையில் மக்களின் தற்போதைய நிலையினை கருத்தில் கொண்டு மருத்துவமனையில் சகல விதமான குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என தருமபுர மருத்துவமனை மருத்துவ அதிகாரி இ. கிருஸ்ண லீங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் அப் பகுதி மக்கள் பரிசோதனைகளை பெற கிளிநொச்சி மருத்துவமனையினையே நாட வேண்டிய நிலை காணப்பட்ட போதிலும் தற்பொழுது தருமபுரம் மருத்துவமனையில் அனைத்து சிகிச்சைகளுக்கான பரிசோதனைகளும் நடைபெற்று வருவதாகவும் இதனை மக்கள் இலகுவில் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவித்தார். (5-316)

# தவறவிட்ட தங்க நகைகளை உரிமையாளரிடம் ஒப்படைத்த சாரதி

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பேருந்தில் நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்ட கிளிநொச்சி நகரை சேர்ந்த பெண் மணி ஒருவர் பேருந்திலிருந்து இறங்கும் போது தவறுதலாக தனது கைப்பை ஒன்றினை பேருந்தில் தவறவிட்டு இறங்கியுள்ளார்.

அதனை பார்வையிட்ட தனியார் பேருந்தின் சாரதியும், உரிமையாளருமான கே.ஜீவானந்தபவனினால் பேருந்தில் கைவிடப்பட்ட குறித்த கைப்பை வவுனியா மாவட்ட பேருந்து சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டது.

கைப்பையில் காணப்பட்ட அடையாள அட்டை ஆவணத்தின் முகவரிக்கு குறித்த உரிமையாளருடன் தொடர்பு கொண்டு அவர் பேருந்தில் தவறவிட்ட ஐந்து பவுண் தாலிக்கொடி மற்றும் மூன்று வங்கி புத்தகம் என்பவற்றை உரிமையாளருடாக உறுதிப்படுத்திய பின்னர் நேற்று வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் அலுவலகத்தில் வைத்து தலைவரினால் ஒப்படைக்கப்பட்டது.

சாரதியின் நேர்மையான செயலை பலரும் பாராட்டியுள்ளனர். (4-5-250-299)

# சேவை பெற வந்தவர்களுக்கு ஏமாற்றம்




(நெளுக்குளம்)

தபால் ஊழியர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் வவுனியாவிலும் தபால் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தபால் நிலையங்களுக்கு நேற்று ஊழியர்கள் வரவில்லை. இந் நிலையில் சிறுநீரக கொடுப்பனவு மற்றும் முதியோர் கொடுப்பனவு போன்றபல்வேறு தேவைகளின் பொருட்டு தபால் நிலையத்திற்கு வருகை தந்த பொது மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

கோரிக்கைகளுக்கு உடன் தீர்வு கிடைக்காவிடின் பாரிய தொழில் சங்க நடவடிக்கைக்கு தயாராவோம் என வவுனியா பிரதான தபாலகத்திற்கு முன்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-299)




சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை திணைக்களகத்தினால் "நிலையான உலகை நோக்கி மாற்றுத்திறனாளிகளின் தலைமைத்துவமும் பங்கேற்பும்" என்ற தொனிப்பொருளில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நிகழ்வும் கௌரவிப்பும் முல்லைத்தீவு சமூக சேவை திணைக்களத்தில் அண்மையில் இடம்பெற்றது.

(படம்- தவசீலன்)

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் இரண்டாம் இடம்

(பனிக்கன்குளம்)

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முதன் முறையாக இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. (5-4-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதிகள் மேலும் குறைக்கப்படும்

## நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டை போக்குவதற்காக இந்தியா, ஜப்பான், சீனா உட்பட நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் இந்த நாடுகளிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டுக்குள் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதிகளை மேலும் குறைக்க நேரிடும்.

எனினும் எரிபொருள், மருந்து, அத்தியாவசிய பொருட்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.


மேலும் இந்தியாவுக்கு சென்று அந்நாட்டு அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாகவும் இதனை தவிர சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்



## நினைத்ததை நிறைவேற்றும் துளசி பூஜை



அபிஷேக பிரியரான சிவபெருமானுக்கு உகந்த இலை வில்வம்.அதைப்போல் அலங்கார பிரியரான திருமாலுக்கு உகந்தது துளசி.திருமாலின் திருமார்பில் ,மாலையாக மகிழ்வோடு காட்சி தருபவள் துளசி தேவி. “ துளசி'' என்ற சொல்லுக்கு 'தன்னிகரற்றது' என்று பொருளாகும்.

'துளசி தீர்த்தத்தால் எனக்கு அபிஷேகம் செய்தால், பல ஆயிரம் அமிர்தக் குடங்களால் அபிஷேகம் செய்த ஆனந்தமடைவேன்' என்று மகாவிஸ்ணுவே கூறியுள்ளார்.

துளசி செடியின் நுனியில் பிரம்மாவும், அடியில் சிவபெருமானும்,மத்தியில் திருமாலும் வாசம் செய்கின்றனர். இவர்கள் தவிர சூரியன், தேவர்கள், கங்கை உள்ளிட்ட புனித நதிகளும் துளசி செடியில் வசிப்பதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

துளசி இலை பட்ட தண்ணீர், கங்கை நீருக்கு சமமானதாக கருதப்படுகிறது. துளசி பூஜை செய்வதால் எட்டு வகை செல்வங்களும் கிட்டும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணம் கைகூடும். துளசி திருமாலுக்கும், திருமகளுக்கும் மிகவும் பிடித்தமானது.

துளசி இருக்கும் இடத்தில் மகா விஷ்ணு நிறைந்து இருப்பார் என்பது ஐதீகம்.

பார்வதி தேவி, துளசி பூஜை செய்ததால் சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்றாள். அதைப்போல் துளசி பூஜை செய்ததால் அருந்ததிதேவி வசிஷ்டரை மணந்தாள். ருக்மணி கிருஷ்ணரை மணவாளனாக அடையும் பேறு பெற்றாள்.கருட பகவான் விஷ்ணுவுக்கு வாகனமாக மாறியதும், அவர் செய்த துளசி பூஜையின் மகிமையால் தான். சாவித்திரி துளசி பூஜை செய்ததால் தான் தீர்க்க சுமங்கலியாக வாழ்ந்தாள். விநாயகர் கஜமுக சூரனை வென்று விக்னேஷ்வரன் என்ற பட்டத்தை பெற்றதும் துளசி பூஜையால் தான்.

**தாலி கட்டும் மந்திர மகிமை**

திருமணத்தில் மணமகன் மணமகள் கழுத்தில் தாலிகட்டும் போது புரோகிதர்கள் ஒரு மந்திரத்தைக் கூற கெட்டி மேளம் முழங்கும்.

மாங்கல்யம் தந்துனானேன
மமஹீவன ஹேதுநா
கண்டே பத்நாமி ஸுபகே
த்வம ஜீவ சரதஸ்சதம்

என்று சொல்கிறார்கள். இதன் பொருள்: மங்கலமான பெண்ணே! உன்னோடு இன்று நான் துவங்கும் இல்லற வாழ்வு நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று உறுதியளித்து, இந்த திருமாங்கல்யத்தை உன் கழுத்தில் அணிவிக்கிறேன். என் இல்லத் துணைவியாக என் சுக துக்கங்களில் பங்கேற்று, நிறைந்த யோ[illegible] வாழ்வோமாக!

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம் இலங்கைக்கு பாதிப்பில்லை

(கொழும்பு)

இந்தோனேசியாவில் நேற்றுக் காலை 7.6 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தை அடுத்து இந்தோனேசியாவில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இலங்கைக்கு உடனடி பாதிப்புக்கள் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## நிராகரிக்கப்பட்ட உரத்திற்கு 6.7 மில்லியன் டொலர்கள்

(கொழும்பு)

சீன உர நிறுவனத்திற்கு 6.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இதனை உறுதிப்படுத்தினார்.

அதேநேரம் இலங்கையின் தரநிலைகளுக்கு இணங்க உரங்களை மீள் உற்பத்தி செய்ய சீன உர நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## முதலீட்டு அதிகார சபைக்கு புதிய தலைவர்

(கொழும்பு)

இலங்கை முதலீட்டு அதிகார சபையின் புதிய தலைவராக ராஜா எதிரிசூரிய நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 380 | 380 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 700 | 750 | 800 |
| தக்காளி | 500 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 50 |
| கோவா | 420 | 450 | 400 |
| கரட் | 280 | 520 | 550 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 300 | -- | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 160 |
| பாகற்காய் | 850 | 780 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 320 | 450 | 500 |
| பீற்றூட் | 180 | -- | 300 |
| கறிமிளகாய் | 600 | -- | 800 |
| முருங்கைக்காய் | 800 | -- | -- |
| போஞ்சி | 350 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 130 | -- | 100 |
| தேசிக்காய் | 250 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 500 | -- | -- |
| முள்ளங்கி | -- | -- | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலிக்காய்ச்சலால் மாணவன் மரணம்

(மொனராகலை)

மொனராகலை மாவட்ட மருத்துவமனை எலிக் காய்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட மாணவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார் என மருத்துவமனை அதிகாரி தனபால ரத்நாயக்க தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் எத்திமலை பிரதேசத்தை சேர்ந்த மதுக்க லக்மால் என்ற மாணவராகும். அவர் இம்முறை நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்தார்.

எலிக்காய்சல் ஏற்பட்டு கடந்த 14 நாட்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (நி)

### டெங்கு, கொரோனா

## ஒரே நேரத்தில் தாக்கினால்

## நிலைமை மோசமாக இருக்கும்

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**டெங்கு மற்றும் கொரோனாவின் இரட்டைச்சுமையில் இலங்கை சிக்கியுள்ளதால், பண்டிகைக் காலத்திற்கு முன்னதாக பொதுமக்கள் எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.**

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கொழும்பு மாநகர சபையின்பிரதான வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த தசாப்தத்தில் மிகக் குறைவான டெங்கு வழக்குகள் பதிவாகிய ஆண்டாக 2020 இருந்ததாகவும் இந்த ஆண்டில் குறிப்பாக நவம்பர் மாதத்தில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை கவலையளிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும் பண்டிகைக் காலத்திற்கு இரண்டு தொற்றுநோய்களும் ஒரே நேரத்தில் தாக்கினால், நிலைமை பயங்கரமாக இருக்கும் எனவும் அவர் எச்சரித்தார்.

எனவே, மக்கள் சுகாதார விதிகளைப் பின்பற்றுவதை



உறுதிசெய்து, தொற்று நோயைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார். (நி)

## மின்சார வாகன கொள்வனவிற்கு மக்களை ஊக்கப்படுத்துங்கள்

### இறக்குமதியாளர்கள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

மின்சார வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு மக்களை ஊக்குவிக்குமாறு வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாகனங்களின் எதிர்காலம் மின்சாரத்தைக்கொண்டே அமைந்திருக்கும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பெற்றோல் வாகனங்களுக்கு பதிலாக தரமான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தச் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பெரும்பாலான வளர்ந்த நாடுகள் மின்சார வாகனங்களை வாங்குவதற்கான வசதிகளை அறிமுகப்படுத்துகின்றன.

சில நாடுகள் மின்சார வாகனங்களை வாங்கும்போது வீதி வரி விலக்கு மற்றும் குறைந்த வட்டிக்கு குத்தகை வசதிகளுடன் குறிப்பிட்ட சலுகைகளை அனுமதிக்கின்றன என்றும் இது மக்களை மின்சார வாகனங்களை கொள்வனவு செய்ய ஊக்குவிக்கும் என்றும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் சட்டிக்காட்டியுள்ளது.

மின்சார வாகனங்களின் பயன்பாடு சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருக்கும் மற்றும் காற்று மாசுபாட்டை குறைக்கும் என்றும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் அரசு இல்லை-கோவிந்தம் கருணாகரம் எம்.பி.

(மட்டக்களப்பு)

ஒரு தேர்தலை எதிர்கொள்ளும் நிலைமையில் இந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வரவு -செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடை பெற்றுக்கொண்டிருக்கும் போதே நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவிற்குச் செல்லும் நிலைமை தான் நாட்டின் தற்போதைய நிலையாக இருக்கிறது.

இந்த நிலையில் மாகாண சபைத் தேர்தலையோ இன்னுமொரு தேர்தலையோ வைக்கக்கூடிய நிலைமை இந்த அரசாங்கத்திடம் இல்லை.

இந்தியா மூலமாக மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இலங்கைக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## இன்று ஒரு தகவல்

### கண்ணீரைக் காணத்துடிக்கும் கனல் மொழிகள்

தாங்கள் செய்வதே சரி என்று ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக எண்ண ஆரம்பித்து விட்டால் அங்கே கருத்து வேறுபாடுகள் பெரிதாகின்றன.

சண்டையும் சச்சரவுகளும் உருவாகின்றன. கடுமையான வார்த்தைகளின் பரிமாற்றம் தொடங்கி கெடுதலில் முடிகிறது. தீர்க்க தரிசனம் (எதையும் முன்கூட்டியே அறியும் தன்மை) சிலருக்கு அமைந்து விட சிலருக்கு அனுபவித்த பின்புதான் தெரிய வருகிறது.

இதற்கிடையில் தீர்க்கதரிசனகாரர்களுக்கு பொறுமை இருப்பதில்லை. சூடான வார்த்தைகளைக் கொட்டி விடுகிறார்கள். கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் செருப்பை அணிந்து கொண்டு நடப்பது புத்திசாலித்தனமா? அல்லது காட்டையே சுத்தப்படுத்தி பெருக்கி விட்டு செருப்பில்லாமல் நடப்பேன் என்ற முயற்சியில் இறங்குவது புத்திசாலித்தனமா?

மற்றவர்களையெல்லாம் திருத்தப்போகிறேன் என்று கடுமையான வார்த்தைகளைப் பொழிபவர்களின் நிலை இத்தகையது தான். மற்றவர்களின் இயல்புகளை மாற்றி அமைக்கிறேன் என உணர்ச்சிகளைக் கொட்டினால் தோல்வியே மிஞ்சும்.

நாம் உணர்ச்சிகளை ஆள வேண்டும். அவை நம்மை ஆள்வதற்கு ஒரு காலமும் இடமளிக்கக்கூடாது. கருத்து வேறுபாடுகள் எவ்வளவு இருந்தாலும் அனுசரித்துப் போக வேண்டும்.

இவற்றிற்கு எல்லாம் நான் தயாராக இல்லை என்பவர்களுக்கு மனக் குழப்பமும் அவப்பெயரும் தான் மிஞ்சும். நட்பும் நல்லுறவும் கெடும். நாம் இழுத்த இழுப்புக்கெல்லாம் மற்றவர்கள் வர வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டுகிறவர்கள் அறிவை, ஆற்றலை, நல்லுணர்வை இன்னும் பலவற்றையும் இழக்கிறார்கள். உணர்ச்சிவசப்பட்டு பேசுபவர்கள் பின்னர் வருந்தத்தான் செய்கிறார்கள்.

பேச்சுக்கு உள்ளானவர்களும் வருந்துகிறார்கள். இப்படி இரு வகையினரும் விரும்பத்தகாத சூழ்நிலைக்கு நல்லவர்கள் காரணமாவானேன்?

தவறுகளை மன்னிக்க முயல வேண்டும். இல்லாவிட்டால் குத்திக் காட்டும் இயல்பையாவது தவிர்க்க வேண்டும். சொல்லித்தான் ஆக வேண்டும் என்றாலும் உடனே சொல்லி விடாமல் நல்லதொரு சூழ்நிலையில் தனியாக இதமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

மனதில் நல்லுணர்ச்சி-தீய உணர்ச்சி ஆகியவற்றின் குவியலாக இருக்கிறான். நம்மிடமுள்ள உணர்ச்சிகள் நமக்கே குழி தோண்டுபவையாய் நம் முன்னேற்றத்திற்கு தடைக்கற்களாக அமைந்து விடுவதைக் காட்டிலும் விரும்பத்தகாத வேறு இருக்க முடியுமா? நமக்கு நாமே எதிரியாகலாமா? மற்றவர்களின் இதயத்தை துளைத்து கண்ணீரைப் பொழிய வைக்கும் சொல்லம்புகளுக்கு இனி வாய்ப்பூட்டு போடுவோம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## தாகம்



நரிக்கு முதலையைப் பிடிக்கவில்லை. அது சாமர்த்தியமாக இச்சகம் பேசுகிறது என்று அது எண்ணியது. என்றாலும் ஒப்புக்காகச் சரி என்று சம்மதித்தது.

நான் உன்னுடன் நட்புத் தொடர வேணடுமானால், நான் தண்ணீர் குடிக்க வரும் போது தண்ணீரை விட்டுத் தரைக்கு வந்துவிட வேண்டும் என்ற நிபந்தனை போட்டது.

அதை ஏற்றுக்கொண்ட முதலை தண்ணீரை விட்டுக் கரையேறி வெகு தூரத்தில் விலகி நிற்க, நரி நீர் குடித்துவிட்டுச் சென்றது.

இப்படியே இது தினந்தோறும் செய்து கொண்டே வர, முதலையுடன் நரிக்கு நட்பு ஏற்பட்டது.

நரி இந்த முதலையால் எப்போது வேண்டுமானாலும் தனக்கு ஆபத்து வரக்கூடும் என்று எண்ணியது. முதலைக்கோ, நரியை தின்றே தீர வேண்டும் என்ற எண்ணத்துடன் வஞ்சகமாகவே இருந்தது.

ஒரு சமயம் முதலை, நரியுடன் பேசிக்கொண்டிருக்கும் போது சொன்னது.

“நண்பா, இங்கே ஒரு பெரிய குரங்கு திரிகிறது. அதன் ஈரலை நான் தின்ன வேண்டும் என்று வெகு நாளைய விருப்பம் இருக்கிறது. அதை எப்படியாவது இங்கே அழைத்து வந்து, எனக்கு உணவாக்க வேண்டும். அந்தக் குரங்கு தந்திரமும், சாமர்த்தியமும் நிறைந்தது.

ஆகவே, எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்!” என்று சொன்னது. “அந்தக் குரங்கு அப்படி என்ன சாமர்த்தியமாக இருக்கிறது?” என்று கேட்டது நரி. “நீயாவது கல் போட்டுப் பார்த்து, நான் இருப்பதைத் தெரிந்து கொண்டு நீர் குடிக்காமல் விலகினாய்.

ஆனால், குரங்கு நான் இருப்பது தெரிந்தும், ஒரு மூங்கில் குச்சியை எடுத்து வந்து அதன் வழியே தண்ணீரை மரத்தின் மீது அமர்ந்து குடித்து விட்டுச் செல்கிறது. அப்படியென்றால் அதன் அறிவு பாராட்டப்பட வேண்டிய ஒன்றே!” என்றது முதலை.

இப்போது முதலையின் கூர் அறிவைப் புரிந்து கொண்டது நரி. “தன்னைவிட அறிவாளியாக இருப்பவர் எவரையும் அழித்து விட வேண்டும் என்று எண்ணுகிறது இந்த முதலை.

குரங்கு அறிவாளி என்று அதற்கு விளங்கி விட்டதால், அதைப் பிடித்து ஒழித்துக் கட்ட அதற்கு நிகரான சாமர்த்தியம் பெற்ற என்னை அதற்குக் கருவியாகப் பயன்படுத்த நினைக்கிறது. (தொடரும்)

# மகாபாரதம்




தருமவியாதர், “கௌசிகனே.. அந்தப் பத்தினி தருமங்களை அறியும் பொருட்டு உம்மை என்னிடம் அனுப்பி யிருக்கிறாள். இவை அனைத்தும் அவளுக்குத் தெரியும்.

ஆயினும் என் மூலமாகவே நீர் மேன்மை அடைய வேண்டும் என்பது அவளது எண்ணம். நீர் நான் சொல்வதைக் கேட்பீராக! நீர் உம் தாய் தந்தையரைப் போற்றிப் பாதுகாக்கவில்லை.

அவர்களின் அனுமதியின்றி வேதப் பயிற்சி பெற வீட்டை விட்டுச் சென்று விட்டீர்.

உம்மைப் பிரிந்த துயரத்தால் அவர்கள் அழுது அழுது கண் குருடாயினர். அவர்களைப் போற்றிப் பாதுகாக்க செல்வீராக” என்றார்.

கௌசிகனும், “நான் செய்த நல்வினையால் இங்கு வரும் வாய்ப்பினைப் பெற்றேன்.

இத்தகைய அறத்தைப் போதிப்பவர் உம்மைத் தவிர வேறு யாருளர். இப்போது நான் நரகத் துன்பத்திலிருந்து கரையேறி விட்டேன்.

உம்மை ஒன்று வேண்டுகிறேன். சென்ற பிறவியில் உமது நிலை என்னவாக இருந்தது? அதையும் தெரிவிக்க வேண்டும். அதைத் தெரிந்து கொண்டு என் ஊர் திரும்பி என்னைப் பெற்றோரை நன்கு பாதுகாப்பேன்” என்றான்.

“முற்பிறவியில் நடந்ததைக் கூறுகிறேன். நான் முற்பிறவியில் அந்தணனாகப் பிறந்தேன். வேதங்களைக் கற்று பண்டிதன்ஆனேன். ஆயினும் என் பாவ கர்மத்தால் ஒரு பெரும் குற்றம் நேர்ந்து விட்டது.

அரசனுடன் காட்டிற்குச் சென்ற போது, நான் ஒரு அம்பு செலுத்த, அது ஒரு முனிவர் மீது பாய்ந்தது.

முனிவர் கடும் சினம் கொண்டார். நான் விலங்கு என எண்ணி இப்படிச் செய்து விட்டேன்! பொறுத்தருளுவீர்.!! என மன்றாடினேன்.

ஆயினும் சினம் தணியாத அம்முனிவர் “நீ வேடனாக பிறப்பாயாக!” என சபித்தார். அதனால் இப்பிறவியை அடைந்தேன்” என்றார் தரும வியாதர்.

அது கேட்டு கௌசிகன்... “தரும வியாதரே! நீர் அந்தணர் குலத்தில் பிறக்கவில்லை என்பது உண்மை.

ஆனாலும் அவர்களை விட மேலான ஒழுக்கமுள்ளவராக உம்மை மதிக்கிறேன்.

அந்தணன் என்பவன் யார் யார் அறத்தைப் போற்றி பின்பற்றுகிறாரோ அவரே அந்தணர் ஆவார்.

பிறப்பால் ஒன்று மில்லை. அவரவர் ஒழுக்கத்தால் தான் போற்றப்படுகிறார்கள் என்பதை நன்கு புரிந்து கொண்டேன்.

அறிவைவிட உயர்ந்த ஞான ஒளி உம் முகத்தில் பிரகாசிக்கிறது.

தருமத்தின் மீது பற்றுள்ளவரே, நான் விடை பெறுகிறேன்” என கைகளைக் கூப்பி வணங்கினான். தரும வியாதரும் விடை கொடுத்தார்.

வீடு சென்ற கௌசிகன் தாய் தந்தையரைக் கண் போல பாதுகாத்து வந்தான்.

இக் கதையை மார்க்கண்டேயர் யுதிஷ்டருக்கு உரைத்தார். இதன் மூலம் கற்பின் சிறப்பும், தாய் தந்தையரை பாதுகாக்கும் அவசியமும், பிறப்பால் மேன்மையில்லை, ஒழுக்கத்தால்தான் மேன்மையடைய முடியும் என்பன போன்ற நீதிகள் உணர்த்தப்பட்டன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.*
*– திருவள்ளுவர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.மாநகர சபை வ.செ.திட்டம் வெற்றி பெறவேண்டும்

2022ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் இன்று வாக்கெடுப்புக்கு வருகிறது.

இவ்வாக்கெடுப்பின் முடிவு எவ்வாறாக அமையும் என்ற எதிர்பார்ப்புகள் பல தரப்பிடமும் இருக்கவே செய்கிறது.

இவ்வாறான எதிர்பார்ப்புக்குக் காரணம் அண்மைக் காலமாக, வடமாகாணத்திலுள்ள பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்டங் கள் தோற்கடிக்கப்படுவதான நிகழ்வுகள் நடந்து கொண்டிருப்பதாகும்.

அந்தவகையில் இன்று வாக்கெடுப்புக்கு வருகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் எவ்வாறாக அமையும் என்ற கேள்வி எழும்போது,

யாழ்.மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் நிச்சயம் வெற்றி பெறும் என்ற அறுதியிட்டுக்கூறமுடியும்.

இவ்வாறு துணிந்து கூறுவதற்குப் பின்னால், தமிழர்களின் ஒற்றுமையை யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்தில் நிரூபிக்க வேண்டிய தேவை உள்ளமை உணரப்படும்.

அதாவது யாழ்ப்பாணம் மாநகர சபை முன்னெடுத்த வேலைத்திட்டங்களில் தமிழர் வரலாற்றை எடுத்தியம்புகின்ற ஆரியகுளம் புனரமைப்பு ஒரு பெரும் சாதனை எனலாம்.

ஆம், தமிழ் அரசர்களின் ஆட்சியை நினைவுபடுத்தவல்ல ஆரியகுளத்தைப் புனரமைப்புச் செய்ததன் மூலம், தமிழர்களின் வரலாற்றுத் தொல்லியல் சான்றொன்று பாதுகாக்கப்பட்டுள்ளது.

அதிலும் ஆரியகுளப் புனரமைப்பைத் தடுப்பதில் அதிகாரத் தரப்புகள் கடும் பிரயத்தனம் செய்த போதிலும் அச்சவால்களையெல்லாம் முறியடித்து ஆரியகுளத்தைப் புனரமைத்து எங்கள் தமிழர் அரசாட்சியின் அடையாளமாக அதனை ஆக்கியமை தமிழர் மத்தியில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இவ்வாறு தமிழ் மக்களின், மனம் குளிரத்தக்க வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை சாதித்தது எனும்போது, அந்த வெற்றியின் வகிபங்கு நம் எல்லோருக்கும் உரியதாகிறது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் வெற்றியடையத் தவறுமாயின், அஃது தமிழ் இனத்துக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்துவதுடன் தமிழர் தம் அடையாளமான ஆரியகுளத்தைப் புனரமைப்புச் செய்த விடயத்தில் தமிழ்த் தரப்புகளுக்கு எந்தக் கருசனையும் இல்லை என்றவாறான கருத்தும் ஏற்பட்டுவிடும்.

தவிர, ஆரியகுளம் தமிழர்களின் வரலாற்றுச் சொத்து என்ற பெருமையை தமிழ்த் தரப்புகள் நிரூபிக்கத் தவறிவிட்டன என்பதான விமர்சனங்களும் நிச்சயம் எழும்.

எனவே ஏனைய பிரதேச சபைகளைப் போலன்றி, யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பை பலதரப்பும் உன்னிப்பாகக் கவனிப்பதால், அந்த வரவு செலவுத் திட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதுடன் அந்த வெற்றி யூடாக தமிழ் மக்கள், தங்களின் மரபு வழி உரிமையை நிலைநிறுத்தப் பின்னிற்க மாட்டார்கள் என்ற செய்தியும் வெளி உலகுக்கு எடுத்துச் செல்லப்படும்.

# தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்குவதில் சுயநல அரசியல் தாக்கம் செலுத்துகிறது

## அமெரிக்க தூதுவரிடம் அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு

இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் மார்டின் ரிஹலி சமகால அரசியல் மற்றும் கடற்றொழில்சார் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகள் தொடர்பாக கேட்டறிந்த அமெரிக்க பதில் தூதுவர், தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பாக தமிழர் தரப்புக்களிடம் ஒருமித்த கருத்து நிலவுவது முக்கியம் என்ற கருத்தினை முன்வைத்தார்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத - நியாயமான வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற தரப்புகளுடன் இணைந்து செயற்படுவதற்கான சமிக்கைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருவதாகவும், ஆனால் ஏனைய சில தரப்புகள் சுயலாபங்களுக்காக மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய தோற்றுப்போன வழிமுறைகளையே தொடர்ந்தும் பேசுவதாக தெரிவித்தார்.

காணாமல்போனோர் விவகாரத்திற்குப் பரிகாரம் காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அணுகுமுறைகள் தொடர்பாகவும் புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஆர்வம் வெளியிட்டுள்ள நிலையில், அதுதொடர்பில் தன்னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விடயங்கள் தொடர்பாகவும் அமெரிக்கத் தரப்பிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

அதேபோன்று, கடற்றொழில் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அமெரிக்காவின் உதவித் திட்டங்கள் பற்றியும் அவற்றின் அவசியம் பற்றியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார். (104)

## மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு புதிதாக இரு உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு புதிதாக இரு உறுப்பினர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆணைக் குழுவின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்கவும் உறுப்பினராக வண. களுபஹன பியரதன தேரரும் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, கொழும்புத்துறை, மணியந்தோட்டம், பழைய பூங்கா வீதி, பாசையூர், பெரிய கோயில், புங்கங்குளம், உதயபுரம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கனகராயன்குளம் சந்தி, ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவ முகாம், குறிசுட்டான் குளம், பரசங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம், விக்னகுளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ஈச்சங்குளம், ஈச்சங்குளம் கல்லறை, ஈஸ்வரிபுரம், கல்மடு, கருவேப்பங்குளம், கற்குளம் (சாஸ்திரி கூழாங்குளம்), கிடாச்சூரி, கோதாண்டர் நொச்சிக்குளம், மணிபுரம், மணிபுரம் வீட்டுத் திட்டம், மறக்காறம்பளை (அபிராமி ஆலை), மறவங்குளம், புதிய பேருந்து நிலையம், பத்தினியார் மகிழங்குளம், பூம்புகார், சமயபுரம், சாஸ்திரி கூழாங்குளம், சோயாவீதி, தாண்டிக்குளம், சுந்தரபுரம், தாண்டிக்குளம், தரணிக்குளம், திருநாவற்குளம், வடக்கு பண்ணை, சமயபுரம் வரன் அரிசி ஆலை, தாண்டிக்குளம் நீர்வழங்கல், நீர்வழங்கல்-புதுக்குளம், மறக்காறம்பளை (பயிற்சிநிலையம்), வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் கோவிலடி, அறுகம்புல்வெளி, குருமன்காடு பிள்ளையார் கோவிலடி, கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், குகன் நகர், குழுமாட்டுச் சந்தி குருமன்காடு, குருமன்காடு கோவில் வீதி, மறக்காறம்பளை- கணேசபுரம், நாகரிலுப்பைக்குளம், நாகர் இலுப்பைக்குளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பட்டைக்காடு, வேப்பங்குளம் 6 ஆவது வீதி, பட்டாணிச்சூர் புளியங்குளம், பொன்னாவரசங்குளம், வைரவப்புளியங்குளம், அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசிஆலை, சுஜன் அரிசி ஆலை, சுஜன் அரிசியாலை- காத்தான் கோட்டம், தெய்வேந்திரம் அரிசி ஆலை, யு.என்.எச்.சி.ஆர்- குருமன்காடு, அரசன் அரிசி ஆலை, வேப்பங்குளம், சியாம் அரிசி ஆலை (சிவா அரிசி ஆலை), காத்தார் சின்னக்குளம், பூந்தோட்டம் மகாறம்பைக்குளம், அறவந்தலாவ-2, அறுகம்புல்வெளி, அவறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பாண்சின்னகுளம், பாவற்குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல் தோட்டம் வீட்டுத் திட்டம், சூடுவெந்தபுலவு, ட்ராக்-07, பாவற்குளம் விநாயகபுரம் வீட்டுத் திட்டம், நெளுங்குளம் நீர்வழங்கல் சபை, இரணையிலுப்பைக்குளம், ஹபீ நகரம், காக்கையங்குளம், கங்காணி குளம், கீரிசுட்டான், கோவில் புளியங்குளம் (மடு), மதீனா நகர் காக்கையன்குளம், முள்ளிக்குளம் திட்டம், பரசங்குளம் (மடு துணுக்காய் வீதி), சின்ன வலயங்கட்டு, விளாத்திக்குளம் (எம்.என்), குருக்கள் புதுக்குளம்- மணியர் குளம், குருக்களூர் மன்னார் வீதி, முகந்தாங்குளம் முதலாவது பண்ணை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்

## குருவும் சீடரும்



'நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் எல்லாமே ஆகிவிட்டது. நம்பிக்கையைத் தவிர வேறு எதுவும் வேண்டியதில்லை. (கேதாரிடம்) நம்பிக்கை எவ்வளவு வலிமை வாய்ந்தது என்பதைக் கேள்விப்பட்டதில்லையா? புராணத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது பூரண பிரம்மமும் சாட்சாத் நாராயணனுமான ஸ்ரீராமர் இலங்கைக்குப் போகப் பாலம்கட்ட வேண்டியிருந்தது.

ஆனால் அனுமனோ ராம நாமத்தில் வைத்த நம்பிக்கையால் ஒரே தாவலில் கடலைத் தாண்டிவிட்டார். அவருக்குப் பாலம் தேவைப்படவில்லை.' (எல்லோரும் சிரித்தனர்). 'ஒருவனுக்குக் கடலைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. விபீஷணர் ஓர் இலையில் ராம நாமத்தை எழுதி, அதை அவனது ஆடையின் ஒரு முனையில் முடிந்தார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

33

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**உரு 28 தாய் எண்கள் (Thai numerals)**

| 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| ๐ | ๑ | ๒ | ๓ | ๔ |
| 5 | 6 | 7 | 8 | 9 |
| ๕ | ๖ | ๗ | ๘ | ๙ |

உதாரணம்

๒๗๓,๔๙๕ =273,495

தாய்லாந்து நாணயத்தாள்கள்




**கெமர் எண் முறைமை (Khmer Numerals) (கி.பி. 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டுகள்)**

**கம்போடிய பற்றி சில வரிகள்**

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான கம்போடியா, இந்தியாவில் இருந்து கிழக்கே 2500 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது. வடக்கே தாய்லாந்து, லாவோஸ், தெற்கே வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு இடையே அந்த குட்டிப் பிரதேசம் குடிகொண்டுள்ளது.

இன்று கம்போடியா எனப்படும் அந்த தேசம், ஒரு காலத்தில் 'காம்புஜ தேசம்' என்ற பெயரைக் கொண்டு இருந்தது. பின்னர் "கம்பூசசியா" என்று மாற்றப்பட்டு இப்போது "கம்போடியா" என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

கம்பேர்டியாவின் பழங்கால வரலாறு, பல ருசிகர தகவல்களைக் கொண்டது ஆகும். பழங்காலத்திலேயே கம்போடியா மக்கள், இரும்பு போன்ற உலோகங்களை உருக்குவது, அவற்றைக் கொண்டு ஆயுதங்கள் செய்வது என்ற முன்னேறிய நிலையில் இருந்தனர் என்பதை அங்கு நடைபெற்ற தொல்பொருள் ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ்நாட்டில் இருந்த வழக்கம் போல, இறந்தவர்களை முதுமக்கள் தாழிகளில் வைத்து புதைப்பது, அந்த தாழிகளில் உலோகத்தினால் செய்யப்பட்ட கருவிகளை வைத்து இறுதிச் சடங்கு நடத்துவது என்ற நடைமுறையை கம்போடியா நாட்டு மக்களும் மேற்கொண்டு இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்து இருக்கின்றன.

முதல் நூற்றாண்டு முதலே அந்த நாட்டின் கெமர் மொழியும், இந்தியாவின் சமஸ்கிருதமும் மட்டுமே அங்கு பேச்சு வழக்கில் இருந்தன. இந்தியாவில் இருந்து 2500 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஒரு நாட்டில் இந்திய மொழி போய் அமர்ந்து கொண்ட அதிசயம் எப்படி நடந்தது? அந்த காலகட்டத்தில் இந்தியாவுக்கும், கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே கடல் வழி வாணிபம் சிறப்பாக நடைபெற்றது. இந்தியாவில் இருந்து சீனாவுக்கு வணிகக்கப்பல்கள், கம்போடியா வழியாகவே சென்று வந்தன.

இத்தகைய வாணிப தொடர்பு மூலமாக கம்போடியா மன்னர்களுக்கும், இந்தியாவில் ஆட்சி செய்த பல்லவர்கள் மற்றும் சாளுக்கிய அரசர்களுக்கும் இடையே நட்புறவு மலர்ந்தது. அந்த நேரத்தில் இந்தியாவில் இந்து மதமும், சமஸ்கிருத மொழியும் உச்சத்தில் இருந்தன. அவற்றில் மனதைப் பறிகொடுத்த கம்போடியர்கள், இந்து மத வழிபாட்டையும், சமஸ்கிருத மொழியையும் அப்படியே சுவீகாரம் எடுத்துக் கொண்டனர்.

சமஸ்கிருத மொழியிலும், வேத மந்திரங்களிலும் தேர்ச்சி பெற்ற அந்தணர்கள் பலரை அந்த நாட்டு மன்னர்கள் அழைத்துச் சென்று தங்களுக்கு ஆலோசகர்களாக வைத்துக் கொண்டனர். இவ்வாறு கம்போடியாவுக்குச் சென்ற அந்தணர்கள், அங்கு அரச சபையில் இருந்தபடி மன்னர்களுக்கு ஆலோசனைகள் கூறி, ஆட்சியில் அதிக செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். இப்படித்தான் இந்தியாவில் இருந்து இந்து மதமும், சமஸ்கிருத மொழியும் கம்போடியாவுக்குப் பயணம் ஆயின. மனுதர்ம சாஸ்திரத்தில், "வீரம் மிக்க ஷத்திரியர்கள், 'வர்மன்' என்று அழைக்கப்பட வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. தமிழகத்தை ஆண்ட பல்லவ மன்னர்கள், இதன்படி தங்கள் பெயருடன் 'வர்மன்' என்ற அடை மொழியைக் கொண்டு இருப்பார்கள்.

இதே அடைமொழியை கம்போடிய மன்னர்கள் தங்களுக்கும் சொந்தமாக்கிக் கொண்டனர். இதனால் கம்போடிய மன்னர்கள் பெயரில் 'வர்மன்' என்பது ஒட்டிக் கொண்டு இருப்பதைப் பார்க்கலாம்.

**கெமர் (Khmer) எழுத்துக்களும் எண்களும்**

கெமர் (Khmer) எழுத்துக்கள் என்பது கம்போடியாவின் உத்தியோகபூர்வ மொழியான கெமர் மொழியை எழுதப் பயன்படும் அபுஜிடா (abu gida) எழுத்துக்கள் ஆகும். கம்போடியா மற்றும் தாய்லாந்தின் புத்த வழிபாட்டு முறைகளில் பாலி எழுதவும் இது பயன்படுகிறது. கெமர் எழுத்துக்கள் இடமிருந்து வலமாக எழுதப்படுகின்றன.

**உரு 29 கெமர் (Khmer) எண்கள்**


| ០ | ១ | ២ | ៣ | ៤ | ៥ |
|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
| ៦ | ៧ | ៨ | ៩ | | |
| 6 | 7 | 8 | 9 | | |

எண் உதாரணம்

៦៧៨៩ =6789

២៣៤៥ = 2345

கம்போடியத் தாளில் கெமர் எண்கள்




ஒரே வாக்கியம் அல்லது சொற்றொடருக்குள் உள்ள சொற்கள் பொதுவாக அவற்றுக்கு இடையில் இடைவெளிகள் இல்லாமல் ஒன்றாக எழுதப்படுகின்றன. தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பிற நாகரிகங்கள் பயன்படுத்தியதைப் போலவே கெமர் எழுத்துக்களின் எண்களும் தென்னிந்திய எழுத்திலிருந்து பெறப்பட்டன. இதைவிட குறைந்த அளவிற்கு மேற்கத்திய பாணி அரபு எண்களும் (கம்போடியாவில்) பயன்பாட்டில் உள்ளன. மேலும் கெமர் எண்கள் எழுதும் முறை இந்து-அரபு எண் முறையை ஒத்தது. உரு 29 ஐப் பார்க்கவும்.

**லாவோஸ் எண் முறைமை**

லாவோஸின் ஆரம்பகால வரலாறு நன்கு பதிவு செய்யப்படவில்லை. குறைந்தது 46,000 ஆண்டுகளுக்கு முன்னர் லாவோஸில் மக்கள் வசித்து வந்தனர் என்றும், சிக்கலான விவசாய சமூகம் கி.மு. 4,000 இற்குள் இருந்ததாகவும் தொல்பொருள் சான்றுகள் தெரிவிக்கின்றன.

கி.மு. 1,500 ஆம் ஆண்டில், வெண்கல உற்பத்தி செய்யும் கலாசாரங்கள் வளர்ந்திருந்தன. கி.மு. 700 அளவில் லாவோஸில் உள்ள மக்கள் இரும்புக் கருவிகளைத் தயாரித்து வந்தனர், மேலும் சீனர்கள் மற்றும் இந்தியர்களுடன் கலாசார மற்றும் வர்த்தக தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

லாவோ எழுத்துமுறை என்பது லாவோ மொழியை எழுதப் பயன்படும் எழுத்துமுறையாகும். இது 27 மெய்யெழுத்துகளையும் 33 உயிரெழுத்துகளையும் கொண்டுள்ளது. கூடுதலாக, 7 மெய் குறிகளும், 4 ஒலி அழுத்தக் குறிகளும் உண்டு. இவ் எழுத்துமுறை, தாய் எழுத்துமுறையை ஒத்ததாக உள்ளது. மற்ற இந்திய மொழிகளைப் போலவே இதுவும் இடது பக்கத்தில் தொடங்கி வலது பக்கம் முடிக்கப்படும். லாவோஸ் எண் எழுதும் முறையானது இந்து-அரபு எண் முறையை ஒத்தது. அது உரு 30 காட்டப்பட்டுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 பேர்...

விக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14, 661 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## 2ஆவது மீன...

யில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை ஒரு மீனவர் சடலமாக மீட்கப்பட் டுள்ள நிலையில் மற்றைய நபர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த செந் தூரன் (வயது-28) என்கின்ற இரண்டு பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (ம-18.285)

## எரிவாயு அடுப்பு...

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரி வுரையாளராக கடமையாற்றும் அ.பௌ நந்தி வீட்டிலேயே இச்சம்பவம் நேற்று-செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணி யளவில் இடம்பெற்றுள்ளது.

வழமைபோன்று நேற்றைய தினம் காலையில் விரிவுரையாளரின் மனைவி உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது, எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

அதன்போது வெடித்து சிதறிய அடுப் பின் பாகம் ஒன்று விரிவுரையாளரின் மனைவியின் தலையில் பட்டதில் அவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

அதேவேளை அடுப்பு வெடித்து சிதறிய அதிர்வில், சமையலறையின் சீலிங் சீட்டும் வெடித்துள்ளது.

எரிவாயு சிலிண்டரை நேற்றுமுன் தினமே மாற்றி இருந்ததாக விரிவுரை யாளர் தெரிவித்துள்ளார். (ம-18,33,104)

## ஆளுநர் தலை...

வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர் பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கைதடி யில் உள்ள வடக்கு மாகாண சபையின் கேட்போர்கூடத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமை யில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாட லில்,

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், சி.சிறீ தரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டி ருந்தனர்.

கூட்டத்திலிருந்து வெளியேறியமை தொடர்பாக சிறீதரன் எம்.பி தெரிவிக்கையில்,

நூற்றுக்கு நூறு வீதம் தமிழர்கள் வாழும் வடக்கு மாகாணம் சார்ந்த கூட்டத் தில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேசுவதால் தன்னால் கிரகித்து பதில் வார்த்தைகளைச் சொல்ல முடியவில்லை என்பதால் கூட்டத்தில் இருந்து வெளி யேறியதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரி வித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையினுடைய கூட் டம் ஆளுநர் தலைமையில் நடைபெற் றது. அந்தக் கூட்டத்திற்கு சென்றிருந்த பொழுது பாராளுமன்ற உறுப்பினர்கள், செயலாளர்கள், அரச அதிகாரிகள் அழைக் கப்பட்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்திற்கு நான் போயிருந்த போதும் ஆங்கில மொழியிலும் சிங்கள மொழியிலுமேயே அந்த கூட்டத்திற்கான பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந் தன. "எனக்கு ஆங்கிலம் தெரியாது. தமிழ் மொழியில் மொழி மாற்றம் செய்வதற்கான ஏற்பாடு செய்து தரவேண்டும்" என்று நான் கேட்டபொழுது செய்கின்றோம் பார்ப்போம் என்று சொன்னார்கள். ஆனால் அதன்பின் னர் ஒரு மணி நேரம் அங்கே இருந்த போதும் எந்தவிதமான மொழி மாற்றத் திற்கான ஆயத்தங்களும் நடைபெற வில்லை.

இதனால் இந்த விடயங்களை என் னால் கிரகித்து பதில் சொல்ல முடியாது என்று சொன்னேன். எத்தனையோ ஆயி ரம் பேர் இந்த மண்ணில் இறந்ததற்கு அடிப்படை மொழிரீதியான பிரச்சினையே ஆகும். இதனாலேயே மாகாண சபை முறைமை தோன்றியது.

நூற்றுக்கு நூறு வீதம் தமிழர்கள் வாழும் இந்த வட மாகாண சபையிலே நீங்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேசுவதால் எங்களால் கிரகித்து பதில் வார்த்தைகளைச் சொல்ல முடியவில்லை. ஆகவே நான் இந்த கூட்டத்தில் இருப்பதில் பிரயோசனமில்லை என்று கருதுகிறேன் எனக் கூறிவிட்டு கூட்டத்தில் இருந்து வெளியேறினேன் என்றார். (ம-18.33)

## யாழ்.மாநகர...

உண்டு.

மாநகர சபை சட்டத்தின்படி இரண்டு தடவைகள் மேயர் பதவி நீக்கப்பட்டால் மாநகர சபை கலைய வேண்டிய ஒரு அபாயம் இருக்கின்றது.

45 உறுப்பினர்களைக் கொண்ட மாநகர சபையில் 16 கூட்டமைப்பு உறுப்பினர் களும் 13 முன்னணி உறுப்பினர்களும் 10 ஈபிடிபி உறுப்பினர்களும் 3 ஐ.தே.க உறுப்பினர்களும் 2 சுதந்திரக் கட்சி உறுப் பினர்களும் ஒரு தமிழர் விடுதலைக் கூட் டணி உறுப்பினரும் உள்ளனர். (ம)

## 3 பிள்ளைகளின்...

ரான மனோரஞ்சிதம் தேவிகா (வயது-37) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 7ஆம் திகதி முதல் காய்ச்சல் காரணமாக சுகவீனமுற்ற நிலையில் 11ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப் பட்டு வந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக விசா ரணையை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேமகுமார் மேற் கொண்டுள்ளார். (ம)

## எரிவாயுவை...

நாட்டுக்கு கொண்டுவந்த 3,700 மெற்றிக் தொன் எரிவாயு தேசிய மட்டத்திலான தர நிர்ணயத்தை கொண்டிருக்காத காரணத் தினால் எரிவாயு தொகையை மீண்டும் திருப்பியனுப்ப நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

எரிவாயு கசிவு உணர்திறனை தூண் டும் எதில் மேர்கெப்டன் இரசாயன பதார்த் தம் எரிவாயுவில் 15 சதவீத அளவில் காணப்பட வேண்டும்.

நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 3,700 மெற்றிக்தொன் எரிவாயுவில் எதில் மேர் கெப்டன் இரசாயன பதார்த்தம் 15 சதவீத அளவிற்கு குறைவான மட்டத்தில் காணப் பட்டமை பரிசோதனை ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவற்றை திருப்பியனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறு வனம் நேற்று முன் தினம் ஒரு தொகை எரி வாயுவை கப்பலில் கொண்டு வந்துள்ளது. இக் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு அண்மித்த பகுதி யில் நங்கூரமிடப் பட்டுள்ளது.

உரிய தரமற்ற எரிவாயுவை தரை யிறக்க அனுமதி வழங்கப்படமாட் டாது என நுகர் வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச் சர் லசந்த அழகிய வன்ன தெரிவித் துள்ளார். (ம)

## எதிர்...

எனினும் இன் றைய தினம் பாதீட்டு விவாதத் தின் பின்னர்தான் ஆதரவளிப்பதா? இல்லையா? என் பது தொடர்பில் முடி வெடுக்கப்படும்என்று ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி தெரி வித்துள்ளது. (ம)

## டொலர்...

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

இந்த நாடுகளி டம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டுக்குள் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப் பாடு காரணமாக இறக்குமதிகளை மேலும் குறைக்க நேரிடும் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் எரிபொருள், மருந்து, அத்தி யாவசியப் பொருட்கள் மற்றும் தொழிற் சாலைகளுக்கு தேவையான பொருட் களை இறக்குமதி செய்ய முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரி வித்துள்ளார். (ம)

## லிட்ரோ...

அறிவிப்பதற்காக லிட்ரோ காஸ் நிறுவனத் துக்கு இன்று வரை மேன்முறையீட்டு நீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் காஸ் நிறு வனங்களால் சந்தைக்கு விநியோகிக்கப் பட்டுள்ள எரிவாயு கொள்கலன்களை மீளப்பெறுமாறு சிவில் செயற்பாட்டாளரான நாகாநந்த கொடிதுவக்குவினால் முன் வைக்கப்பட்ட நீதிப்பேராணை மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்த கால அவகாசத்தை வழங்கியது.

அதன்போது நீதியரசர்கள் ஆயம், குறித்த எரிவாயு கொள்கலனில் உள்ள உள்ளடக்கத்தின் செறிமானம், அந்த செறி மானத்தை காட்சிப்படுத்தக்கூடிய இய லுமை, தற்போது சந்தைக்கு விநியோகிக் கப்பட்டுள்ள எரிவாயு கொள்கலன்களை மீளப்பெறக்கூடிய இயலுமை தொடர்பிலும் வினவியிருந்தது. (ம)


தன நிதானய
திகதி - 2021.12.14
சீட்டிழுப்பு இலக்கம் - 646
D 31 48 65 81

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 14.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2911
D 04 25 64 70

மஹஜன சம்பத
திகதி 2021/12/14
சீட்டிழுப்பு இலக்கம் 4616
T 3 3 1 6 0 1

சுபிரி வாசனா
2021/12/14 1646
02 06 07 24 50

மெகா பவர்
திகதி 14/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0964
H 09 04 26 35 38

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1419
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 14.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,545,100
06 43 56 69 K

சனிதா
சீட்டிழுப்பு இல: 3754
சீட்டிழுப்பு திகதி: 14.12.2021
ரூ. 4,069,280
30 54 58 74 R

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1593 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 14.12.2021 தினம் செவ்வாய்
H 07 19 26 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 74,757,679/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,557,707/=
திகதி 14.12.2021
வெற்றி வாரம் 3305
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 12 19 37 39
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,282,020/=

778
14. 12. 2021
H 11 28 58 79
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,168,200/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், மயிலிட்டி B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**076 890 9259**
**077 015 0353**

(9082)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(Lanka Farm அருகாமையில்)
1 பரப்பின் விலை 12 இலட்சம்

**077 658 5999, 077 623 4204**

(9081)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(நிலப்பரப்பு)
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(9074)
தொடர்புகளுக்கு
**077 814 7389, 070 705 1655**

the Inner Circle

## வேலை வாய்ப்பு

Job, Job, Job,....

நீங்கள் O/L, A/L பயின்றவரா?
நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை

- தொலைத் தொடர்பாளர்
- நிர்வாக அதிகாரி
- ஒருங்கிணைப்பாளர்
- மேற்பார்வையாளர்



பயிற்சிக் காலத்தில் இருந்தே ரூ. 18,500 அடிப்படைச் சம்பளத்துடன் (EPF/ETF), ரூ. 40,000 இற்கு மேல் உயர் ஊதியம் பெற்றுக் கொள்ளக்கூடிய நிரந்தர தொழில் வாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(9080)
**076 756 5659**
இல. 100/3, 3ஆம் மாடி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


மாவீரர் தினம் தொடர்பில் முகநூலில் பதிவு

# கைது செய்யப்பட்ட இளைஞனுக்கு ஒரு வருடத்திற்குபின் பிணை

(திருகோணமலை)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞனுக்கு, ஒரு வருடத்திற்குப் பின்னர், திருகோணமலை மேல் நீதிமன்றத்தினால் நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன், மாவீரர் தினத்தை முன்னிட்டு, கவிதை ஒன்றினை தமது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றியமைக்காக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான வழக்கு, திருகோணமலை மேல் நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ் செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிணைகளில் செல்ல அனுமதியளித்து நீதிபதி உத்தரவிட்டார். (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(9071)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9063)
**076 825 7716** (ஆகாஸ்)

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 45 வயது நபருக்கு உறுப்புமாற்று சிகிச்சை செய்வதற்கு O+ அல்லது O- குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(C-3257)
**077 620 3932**
**076 322 1975**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் (கிப்ற்) Gift center இற்கு

- GRAPHIC DESIGNER கிரபிக் டிசைனர்
  Photoshop, Corel Draw முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- விற்பனையாளர்கள் (பெண்கள்)
  அனுபவம் உள்ளவர்கள்/ இல்லாதவர்கள் தொடர்புகொள்ளவும்.

(9078)
**077 493 9799**
**077 210 5286**


# வாகீச கலாநிதி நாகேஸ்வரன் காலமானார்



சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் நேற்று அதிகாலை கொழும்பு வெள்ளவத்தையில் காலமானார்.

நயினை நாகபூசணி அம்பாள் ஆலய பரம்பரை அறங்காவலரான அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தொகுப்பாளரும் அறிவிப்பாளரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் சிறப்புப் பட்டதாரியும் என்ற பெருமையைப் பெற்றவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறும். (ம)


## 2022 ஆம் ஆண்டுக்கான Desk Diary - 140/=

பேப்பர் கவுஸ்
இல.300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-3259)

## காணி தேவை

யாழ். மாநகர சபை அல்லது நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் குடியிருப்பு தேவைக்கு 2 பரப்பிற்கு மேற்படாத காணி தேவை.
(9020)
**077 208 6789**

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(9073)

NOBLE INTERNATIONAL
Papers Lanka (Private) Limited

## பணிநிலை வேண்டுகை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கும் கடதாசி தொழிற்சாலையில் பணியாற்றுவதற்கு பின்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**01. உதவி இயந்திர இயக்குனர்கள் (பயிலுனர்)**

- தொழில்நுட்ப கல்லூரியில் இயந்திரவியல் பாடநெறி கற்றிருத்தல் மேலதிக தகுதியாக கருதப்படும்.
- சாதாரண தரத்தில் சித்தி (6 பாடம்)

**02. தொழிற்சாலை உதவியாளர் (Helper)**

- தொழிற்சாலைகளில் பணியாற்றிய அனுபவம் மேலதிக தகுதியாய் கொள்ளப்படும்.

**தெரிவு செய்யப்படும் தொழிலாளர்களுக்கு**

1. தகுதிக்கேற்ப சம்பளமும் வரவுப்படி, உற்பத்திப்படி என்பனவும் வழங்கப்படும்.
2. தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கான உணவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

**பணிநிலைகளுக்கு**
விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய அடையாள அட்டையுடன் கைத்தொழில் பேட்டையில் அமைந்திருக்கும் தொழிற்சாலை அலுவலகத்திற்கு 15ஆம் திகதி முதல் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.
(9052)
076 141 9332

## சிசிரிவி கமரா

உங்கள் வீடுகள் அலுவலகங்களில் சிசிரீவி கமராக்கள் சிறந்தமுறையில் ஒரேநாளில் பொருத்தி தருகிறோம்.
துல்லியமான தெளிவு நியாயவிலை
இரண்டு வருட உத்தரவாதம் அழையுங்கள்!
0779086737 GUNA BEST PC
379 கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.
522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்.
ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள கமராக்கள் பழுதடைந்திருந்தால் அவற்றையும் உடன் சரிபார்த்து தருகிறோம்.
சிசிரீவி கமரா - விற்பனை பொருத்துதல் திருத்தம்
CCTV Camera - Sale Installation Repair
(9076)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்!
0779086737 GUNA BEST PC
379 கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.
522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்.
கணினி லப்டொப் பிறின்டர் ஸ்மார்ட்போட்
சிசிரீவி கமரா - விற்பனை திருத்தம்
Computer Laptop Printer Smart Board
CCTV Camera - SALE & REPAIR
(9077)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3215)
0768226240 DHL

## கனடாவில் வேலைவாய்ப்பு WORK PERMITS

தகுதிகள்:- A/L PASS/ DIPLOMA/DEGREE ஆங்கில அறிவு
(C-3237)



அனைத்து துறைகளிலும் அனுபவம் அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.